செ.வெ.எண்:168 நாள்:11.3.09

# அரசு செய்தி வெளியீடு – 11.3.2009

## சென்னை மாநகரில் என்.எஸ்.ஜி. படைப்பிரிவு.

## முதலமைச்சர் கலைஞருக்கு பிரதமர் கடிதம்.

மும்பையில் நடந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பிறகு நாட்டின் முக்கிய நகரங்களில் தேசிய பாதுகாப்பு படையின் பிரிவுகளை அமைப்பதற்கு மத்திய அரசு முடிவெடுத்ததைத் தொடர்ந்து – அந்தத் தேசிய பாதுகாப்பு படையின் ஒரு பிரிவினை நாட்டின் தென் பகுதியில் அனைத்து வசதிகளுடன் விளங்கும் சென்னை மாநகரில் அமைத்திட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் நேரடியாகவும், கடிதம் மூலமாகவும் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்தக் கோரிக்கையினை ஏற்று – தேசிய பாதுகாப்புப் படையின் ஒரு பிரிவினை சென்னையில் அமைத்திட மத்திய அரசு முடிவு செய்துள்ள தாக இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள்; முதல் அமைச்சர் கலைஞர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.